**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு 47/2016**

DW 2 – ஆதிமூலம் த/பெ பெரியசாமி
நாள் – 14.12.2023.

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதன்மை விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.

தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் செலுத்திய வீட்டு வரி ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.1 –வரிசை (எண்ணிக்கை – 11 ) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் செலுத்திய மின் கட்டண ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.2 –வரிசை (எண்ணிக்கை – 33 ) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தை பொறுத்து ஆச்சாள்புரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் பயிர் காப்பீடு தொகை செலுத்தியதற்கான ரசீதுகள் தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.3 –வரிசை (எண்ணிக்கை – 2 ) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் அனுப்பப்பட்ட தொலைதொடர்பு துறையினர் அனுப்பிய கடிதத்தின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.4 –வரிசை (எண்ணிக்கை – 6 ) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்குள்ள தொலைபேசி எண்ணிற்கு நான் கட்டணம் செலுத்திய ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.5 –வரிசை (எண்ணிக்கை – 9 ) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்தின் வீட்டில் உள்ள இணைப்பிற்கு எரிவாயு கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகளின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.6 –வரிசை (எண்ணிக்கை – 12 ) ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தாவா சொத்து முகவரிக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட கான்கிரீட் வீடு பெறுவதற்கான தகுதி அட்டையின் அசலை தாக்கல் செய்கிறேன். **அது பி.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.